**அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திற்கான மேலதிக நிதியளிப்பு - 2015**

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திற்கான மேலதிக நிதியளிப்பின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் (ஐடிஏ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 5445-எல்கே ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கையின் பொது நிபந்தனையின் 4.09(பீ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை, நீர்ப்பாசனத் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, நீர் வளங்கள் சபை, மாகாண சபைகள் மற்றும் இலங்கை மின்சார சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. பெரிய அணைக்கட்டுக்களின் செயற்பாடு மற்றும் பராமரிப்பிற்கான நீண்ட கால நிலைபேறான ஒழுங்கமைப்புக்களை ஸ்தாபிப்பதும் நீர் வளங்கள் திட்டமிடலை முன்னேற்றுவதுமே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாக உள்ளன. நிதியளிப்பு உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 11,036.91 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 84.5 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 10,841.5 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 83 மில்லியன் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2014 ஒக்தோபர் 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2018 மே 15 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமன பட்டியலிட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான புத்தகங்கள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க

மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்ததா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(எ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஏ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஒ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும், இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விசேட (டொலர்) கணக்கிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில்

உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்ததென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

33 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 3.2 ஆம் பிரிவின் பிரகாரம், அரச துறையிலிலுள்ள ஏனைய அமைப்புக்களிடமிருந்து விடுவிக்கப்பட்ட நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் அலுவலர்களின் சேவைக்காலமானது 05 வருடங்களிற்கு வரையறுக்கப்பட்டிருந்தது. எனினும் இலங்கை மகாவலி அதிகாரசபையிடமிருந்து விடுவிக்கப்பட்ட 09 அலுவலர்கள் 05 வருடங்களுக்கு மேலாக செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

### 2.2.2 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் பயன்படுத்தப்பட்ட நிதி

ஏனைய நன்கொடை நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக ஈடுபட்டுள்ள ஒரு சீனா நிர்மாணக் கம்பனியினூடாக செயற்திட்டத்தினுடைய அமுல்படுத்தல் முகவர்களின் 14 அலுவலர்களிற்காக 2015 யூலை 27 இலிருந்து 2015 ஆகஸ்ட் 01 வரை சீனாவுக்கு கல்விச் சுற்றுலா ஒன்று, செயற்திட்ட பணிப்பாளரால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. 07 நாட்களில், 03 நாட்கள் இடங்களை பார்த்தல் மற்றும் பொருட்கள் வாங்குதல் போன்ற நோக்கங்களிற்காக செலவிடப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டிருந்தது. ஆகையால் அதற்காக ஒதுக்கப்பட்ட நேரம் மற்றும் ரூபா 980,750 தொகையான படிகளின் மேலதிக கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக செலவிடப்பட்ட ரூபா 2.83 மில்லியன் கிரயம் அறிவுத்திறன் மற்றும் அனுபவங்களை பெறுவதனூடாக செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைவதற்காக ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போதான மற்றும் 2015 திசெம்பர் 31 வரையுமான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான சில முக்கியமான புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 83.00 | 10,841.50 | 1,910 | 13.89 | 1,935.02 | 15.04 | 2,049.31 |
| இலங்கை அரசாங்கம் | 1.50 | 195.41 | 40 | 0.04 | 4.49 | 0.04 | 4.49 |
| | **84.50** | **11,036.91** | **1,950** | **13.93** | **1,939.51** | **15.08** | **2,053.80** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திற்கான மேலதிக நிதியளிப்பானது அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் விரிவாக்கமாக சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தின் 2006 மார்ச் 16 இன் Q 5200 ஆம் இலக்க கடனின் கீழ் 2015 திசெம்பர் 31 வரை அமுலாக்கப்பட்டிருந்ததுடன் சொல்லப்பட்ட செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த பல நடவடிக்கைகள் இந்த செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்தது. அதன் மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) அணைப்பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு வினைத்திறன் முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நீர்ப்பாசன திணைக்களத்தின் ஆதிக்கத்தின் கீழ் 14 குளங்கள், இலங்கை மகாவலி அதிகாரசபையின் ஆதிக்கத்தின் கீழான 04 குளங்கள் மற்றும் இலங்கை மின்சார சபையின் ஆதிக்கத்தின் கீழான ஒரு குளம் ஆகியவற்றின் அணைகளின் சீரமைத்தல் வேலைகளுக்காக 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 720 மில்லியன் தொகையான ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதற்கான ஒப்பந்தங்களை வழங்குவதற்கு 2015 திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், நீர்ப்பாசன திணைக்களத்தின் ஆதிக்கத்தின் கீழான மலிந்த வெவ அணை மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையின்

ஆதிக்கத்தின் கீழான அம்பகஹகம வெவ மற்றும் பணக்கனியவெவ அணைகளின் சீரமைப்பு வேலைகள் பின்னர் மூலத்திட்டங்களிலிருந்து மீளப்பெறப்பட்டிருந்தது.

(ii) நிர்மாணத்தின் 20 வருடங்களிலிருந்து 30 வருடங்கள் வரையான காலவீச்சிற்குள் அவசியமாக மேற்கொள்ளப்படவேண்டிய பொலகொல்ல சுரங்கப்பாதையின் சீரமைப்பு வேலைகள் வறட்சியான காலத்தின் போது சுரங்கத்திற்கு அருகிலுள்ள மக்களுக்கு ஏற்பட்ட சாதகமான அசௌகரியங்கள் காரணமாக முதலாவது அணை பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் கீழ் சர்வதேச பாதுகாப்பு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், செயற்திட்டத்தின் கீழான உரிய வேலைகளுக்காக வேண்டப்பட்ட ஒதுக்கீடு அத்தகைய உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான மாற்றுவழிகளை கருத்திற்கொள்ளாமல் வரிசை அமைச்சினால் மீளப்பெறப்பட்டிருந்தது.

(iii) முதலாவது அணைப் பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்திலிருந்து மாற்றப்பட்ட தரவு உட்சேர்த்தல் மற்றும் காட்சி முறைமை மற்றும் நிலநடுக்க கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை முறைமைக்கான நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் அவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 80 மில்லியன் தொகையான ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. செயற்திட்ட பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விளக்கத்தின் பிரகாரம், தரவு உட்சேர்த்தல் மற்றும் காட்சி முறைமையின் நடவடிக்கைகள் மகாவலி வெள்ள கண்காணிப்பு மற்றும் நீர்த்தேக்க கட்டுப்பாட்டு நிலையத்தினால் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்ததுடன் நிலநடுக்க கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை முறைமையின் நடவடிக்கைகளானது புவியியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தால் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தமையால் உரிய நடவடிக்கைகளானது செயற்திட்டத்தினால் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல் துறை நீர்வளங்கள் திட்டமிடல்

முதலாவது அணை பாதுபாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தின் 03 ஆம் கூறின் கீழ் தயாரிக்கப்பட்ட 03 நீர் பயன்பாட்டுத் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டியிருந்தது. எனினும், அதற்கான கொள்கை தீர்மானங்களை எடுத்ததிலுள்ள தாமதங்கள் காரணமாக உரிய நடவடிக்கை 2016 ஏப்ரல் 30 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவால் செயற்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டிற்காக அவற்றின்மீது மேற்கொள்ளப்பட்ட ரூபா 13 மில்லியன் ஒதுக்கீடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.3. ஒப்பந்த நிர்வாகம்**

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) மினிப்பே டிரான்ஸ் நீர்த்தேக்க கால்வாயை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தின் மதிப்பிடப்பட்ட கிரயமானது ரூபா 300.54 மில்லியன் தொகையாகவிருந்த போதிலும், மூன்றாவது குறைந்த கேள்வியாளருக்கு ரூபா 430.84 மில்லியன் கூறுவிலையில் உரிய ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்ட பணிப்பாளரின் விளக்கத்தின் பிரகாரம், ரூபா 423.28 மில்லியன் தொகைக்கான இரண்டாவது குறைந்த கூறுவிலையானது முன்னைய ஒப்பந்தங்களில் காணப்பட்ட கேள்வியாளரின் குறைவான செயலாற்றல் காரணமாக நிராகரிக்கப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒப்பந்தத்தின் கீழான புனரமைப்பு வேலைகள் 31 சதவீதமான மந்தமான செயலாற்றலை காட்டியிருந்த அதேநேரம் இது அத்திகதியில் 59 சதவீத முன்னேற்றத்தை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

(ஆ) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்ட தபோவ மற்றும் தேவனுவற கிரமாங்களுக்கிடையிலான தபோவ கால்வாய்க்கு மேலாக புதிய பாலத்தினை நிர்மாணத்திற்கான ஒப்பந்தம் 2013 நவம்பர் 26 இல் ரூபா 14.75 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டது. எனினும், வேலைகளின் நோக்கெல்லை தொடர்ச்சியாக மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 5.71 மில்லியன் பெறுமதியிடப்பட்ட 08 முரண் கட்டளைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அனுமதிக்கப்பட்டிருந்தது. மேலும், வேலைகளின் நோக்கெல்லையின் மாற்றங்களின் விளைவால், தளத்தில் 90 ஹியூம் குழாய்கள் (Hume Pipes) பயன்பாடற்று இருந்தது. ரூபா 2.57 மில்லியன் தெகையான ஹியூம் குழாயின் கிரயத்தை மீளளிப்பதற்கு ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகை நீர்ப்பாசன திணைக்களத்தின் பிராந்திய பணியாளரால் 2015 யூலை 10 இல் அனுமதிக்கப்பட்டிருந்தது.

(இ) தவோவ குளத்தின் 20 சிலைட் வான்கதவுகளின் (Slide gates) கம்பிகளின் மீளமைப்பு மற்றும் புனரமைப்பிற்கான ஒப்பந்தமானது 2015 மார்ச் 19 இல் ரூபா 2.31 மில்லியன் கிரயத்தில் வழங்கப்பட்டிருந்ததுடன், இதில் 05 சிலைட் வான்கதவுகளின் (Slide gates) 05 கம்பிகள் 2016 மே 17 இல் உள்ளவாறு உடைந்தவையாக அறிக்கையிடப்பட்டிருந்தது. இதன் விளைவால், வான்கதவுகளின் உண்மையான பாவனை மீதான இடர்களை கணக்காய்வில் புறக்கணிக்க முடிந்திருக்கவில்லை. மேலும், தபோவ குளக்கட்டின் கீழ் வடிகட்டியையும் கீழ் வாய்க்காலையும் கட்டியெழுப்புவதற்காக ரூபா 37.63 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், ஒப்பந்தக்காரர் 100 மீற்றர் குளக்கட்டிற்காக அத்தகைய கட்டமைப்பை கட்டியெழுப்பியிருக்காததுடன் இதன் விளைவால், நீர்க் கசிவுகளை அளவிடுவதற்கான குறிக்கோள்கள் முறையாக அடையப்பட்டிருக்கவில்லை.

3.4 **வழமைக்குமாறான நடவடிக்கைகள்**

செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு அப்பாற்பட்டிருந்த அமுலாக்கும் முகவர்களுக்குச் சொந்தமான 09 சுற்றுலா விடுதிகளை புதுப்பிப்பதற்கு கடன் பெறுகைகளில் செயற்திட்டத்தால் ரூபா 14.46 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது.

### 3.5 பயன்பாடற்ற சொத்துக்கள்

நீரின் தரம், நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்கள் மற்றும் அதற்காக அபிவிருத்தி செய்யப்பட்ட மென்பொருள் போன்றவற்றை அளவீடு செய்யும் நோக்கத்திற்காக ரூபா 91.2 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஆய்வுகூட உபகரணங்கள் தேர்ச்சி பெற்ற பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடற்றிருந்தது.

### 3.6 நிதிக்கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

ரூபா 304.68 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்துக்களுக்காக உரிய சொத்துக்களின் அமைவிடங்களை இனங்காண்பதிலுள்ள பிரச்சனைகள் காரணமாக நிலையான சொத்துப்பதிவேடு முறையாக பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அத்தகைய சொத்துக்களின் பௌதீகரீதியான இருக்கும் தன்மையானது பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின்மை காரணமாக நம்பகத்தன்மையுடையதாக சான்றுறுதிப்படுத்த முடிந்திருக்கவில்லை.

### 3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

60 வயதிற்கு மேற்பட்ட கணக்காளரொருவர் ஒப்பந்த அடிப்படையின் கீழ் செயற்திட்டத்தால் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. மேலும், அதன்மீது அமைச்சரவையின் அனுமதியைப் பெறுவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் தவறான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது.